
மில்க்வைற் செய்தி
Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம் தொலைபேசி 23233

கௌரவ ஆசிரியர்: திரு. சி. அ. பாலசிங்கம் ★ கார்த்திகை 1994 ★ இதழ் - 183

# பல்லாண்டு பல்லாண்டு வாழ்க



**கனகராசா - மில்க்வைற் கனகராசா என்ற பெயர் மரநடுகை, சூழல் பாதுகாப்பு ஆகியவற்றின் ஒத்த கருத்தை உள்ளடக்கியது. கற்றவர்களின் கவனத்தைக்கூட இவை கவரவில்லை. சர்வதேச அரங்கிலே கூட இத்துறையில் அக்கறை ஏற்படவில்லை.**

கல்லூரியிலோ, பல்கலைக் கழகத்திலோ கிட்டாத அறிவை, சிந்தனையாற்றலை வாசிப்பதன்மூலம் பயின்றார். ''வாசிப்பின் மூலம் ஒருவன் நிறைமனிதனாகிறான்'' என்ற முதுமொழி மெய்ப்பிக்கப்பெற்றது. முப்பத்தைந்து ஆண்டுகட்கு முன்னரே ''மனிதன் இன்றி மரம் வளரும், மரம் இன்றி மனிதன் வாழ முடியாது'' என்பதை உணர்ந்து செயற்பட்டார். எமது பிரதேசத்தின் இயற்கை வனப்பிற்கேற்ற வெப்பத்தையும் தாங்கி வளரக்கூடிய ''பனையை வளர்ப்போம், பயனைப் பெறுவோம் என்று பனைக்கொடி கம்பீரமாகப் பறக்கும் வாகனங்களில் ஆண்டுதோறும் பல இலட்சக்கணக்கான பனம் விதைகளை வடமாகாணத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் எடுத்துச்சென்று நாட்டி வைத்தார்.

இதனால் பாடசாலைகள், ஆலயங்கள், பொது வாசிகசாலைகள், நூல்நிலையங்கள் தேவாலயங்கள் கிராமத்தில் அறியப்படவேண்டியவர்கள் அனைவரையும் அறிந்துகொள்ளவும் அவைகளின் அத்தியாவசிய தேவைகள் பல கவனிக்கப்படாது உள்ளதைத் தெரிந்து கொள்ளவும் வாய்ப்பேற்பட்டது, இதனால் பனைமரம் மட்டுமின்றி மற்றும் நெல்லி, சஞ்சீவி, சவுக்கு, மருது, இலுப்பை, வேம்பு, மலைவேம்பு வாகை, சரக்கொன்றை, கடம்பு, அகத்தி, அரசு, ஆல், மகிழ் ஆகிய மரக்கன்றுகளையும் தமது நாற்று மேடைகளில் உற்பத்தி செய்து இருக்குமிடம் தேடி எடுத்துச் சென்று அவற்றை நட்டுப் பேணிவளர்க்க ஊக்கமளித்தார்.

நல்ல இனத் தென்னம்பிள்ளைகளை தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் கொள்வனவு செய்து இங்கு பரவச்செய்தார்.

பணிகள் மேலும் விரிவடைந்தன, குடிநீர் வசதியற்ற பல பாடசாலைகளுக்கு கிணறுகள் தோண்டிக் கொடுத்தார். தண்ணீர்ப் பம்புகள் வாங்கிக் கொடுத்தார்.

(தொடர்ச்சி 2ம் பக்கம் பார்க்க)

★ மரம் வளர்ப்போம் உயிர் வாழ்வோம் ★

உ



## திருநாவுக்கரசுநாயனார்

### திருவாரூர் — திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

உயிரா வணமிருந் துற்று நோக்கி
உள்ளக் கிழியி னுருவெழுதி
உயிரர் வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்த்தி
அயிரா வணமேறாது ஆன்ஏறு ஏறி
அமரர்நா டாளாதே ஆரூராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே.

திருச்சிற்றம்பலம்

இடைகலை, பிங்கலை ஆகிய இரு வழியாலும் சென்று வரும் மூச்சைத் தடுத்து இருந்து தியானத்தினால் மனத்தை ஒரு குறியில் ஊன்றி உள்ளத்தில் உருவம் பதியும்படி தீட்டி அடிமைச் சீட்டெழுதி ஒப்பிட்டு ஆன்ம சமர்ப்பணஞ் செய்து இவ்வாறு உணரப்படுகிற சிவயோகியரோடு பண்டைப் பரிசாகிய பிரிவருநிலை வெளிப்பட விளங்குவாய். திருவாரூர் ஆட்சியை விரும்பி எழுந்தருளிய பிரகிருதி விசுவரூபமாக உள்ளவரே! உன் அருட்பார்வை கிட்டாதவர்கள் ஒன்றுக்கும் பற்றாதவரே.

## ஓலைச் சுவடியில் எழுதுவது எப்படி?

பனையோலைகளை ஒரே அளவாக நறுக்கி வேக வைத்து, உலர்த்தி, ஒன்றாகச் சேர்த்து. இரண்டு மரச் சட்டங்களை இரு பக்கங்களிலும் நீண்ட பக்கமாக அமைத்து, அவற்றின் ஊடே இரண்டு துளைகளிட்டு அமைத்துக் கயிறு கொண்டு சுற்றிக் கட்டிய சுவடிகளே ஓலைச் சுவடிகளாகும்.

இப்பனையோலைச் சுவடிகளில் ஏடுகளை இடக் கையில் பிடித்துக்கொண்டு இரும்பாலான கூரான எழுத்தாணியை வலக்கைப் பெருவிரலால் அணைத்துப் பிடித்து இடக்கைப் பெருவிரல் நகத்தின் மையத்தில் சிறு பிறை வடிவாகப் பள்ளம் செய்து கொண்டு வரி வரியாக வரையத் தொடங்குவார்கள்.

ஓலையின் மேல் வைத்த இடத்திலிருந்தே எழுத்தாணி கீறிக்கொண்டே வரும். ஓலைமட்டும் இடக்கைப்பக்கத்திலிருந்து வலப்பக்கம் நகர்ந்து கொண்டே வரும். இது தற்காலத்தில் தட்டச்சடிப்பான் பொறியில் Typewriter Machine) தாள் பொருத்தப்பட்டிருக்கும் பகுதியின்மேல் அச்சுப் படிந்துவர, தாள் பகுதி அசைந்து கொண்டே போவதையும் அதே அச்சு ஒரே மையத்தில் வந்து விழுவதையும் ஒப்பு நோக்கினால், முன்னதான முறையிலே பின்னது அமைக்கப்பட்டுள்ளதை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.



## ஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓ திருவள்ளுவர் திருக்குறள் ஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓ

### பெருமை

**சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு''**

பெரியோரை விரும்பிப் போற்றுவோம் என்று எண்ணும் பெருமை சின்ன மனம் படைத்தோர் உள்ளத்தில் அமையாது.

### GREATNESS

''As votaries of the truly great we will ourselves enroll''
Is thought that enters not the mind of men of Little soul.


(1ம் பக்கத் தொடர்)

நீர் சேமிக்கும் தண்ணீர்த் தாங்கிகள் கட்டிக் கொடுத்தார். கரும்பலகை இல்லாது அவதிப்பட்ட பாடசாலைகட்கு கரும்பலகை வாங்கிக் கொடுத்தார், நூல்நிலையங்கள் அமைக்க நூல்கள் கொடுத்தார். மனனஞ் செய்யவும் பாராயணம் செய்யவும் நூல்கள் அச்சேற்றிக் கொடுத்தார். இப்பணிகள் வடமாகாணம் மட்டுமன்றிக் கிழக்கேயும் பரவின,

ஆலய கட்டிடத் திருப்பணிகளுக்கும் கண்டாமணி, கலசம்போன்ற சாதனங்கள் அமைக்கவும் தாராளமாக உதவியதோடு வெகுவாகப் பாதிப்புற்ற வன்னிப்பிரதேச ஆலயங்கள் பல புனருத்தாரணம் செய்வதற்கு ஊக்கமும் உற்சாகமும் ஆக்கமும் அளித்தார்கள். முதியோர் இல்லம், வலுவிழந்தோர் புனர்வாழ்வு, சிறுவர் இல்லங்கள், செவிப்புலனற்றோர்கள் இவர் வள்ளன்மையால் பயன்பெற்றுவருகிறார்கள். இன்று சேவை, தொண்டு வள்ளன்மை ஆகியவை கனகராசா என்னும் பெயருக்கு ஒத்த பொருளுடைய.

தான்பெற்ற இன்பம் பலரும் பெறவேண்டும் என்ற கொள்கை விழைவில் விளைந்ததே 'மில்க்வைற்' செய்தி'' என்ற திங்கள் இதழாகும். அமரர் பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் ஐயா அவர்களின் புலமையும், பொழுதும் ''மில்க்வைற் செய்தி''யின் தனித்துவமான பொருட் செறிவுக்கும், கருத்தாழத்திற்கும் வெகுவாக உதவின.

கலாநிதி கனகராசா அவர்களின் கைப்பிடித்து காரியம் அனைத்திலும் கைகொடுத்து வரும் அவர் துணைவியார் மனைத்தக்க மாண்புடையவர். இன்று அறுபத்தெட்டாம் அகவையில் நுழையும் கனகராசா அவர்களும் அவர் செப்பாதி நாகம்மா அம்மையாரும் பல்லாண்டு, பல்லாண்டு சுகதேகிகளாக வாழ்ந்து அறம் புரக்க வாழ்த்துகிறோம்.



## நெஞ்சம் மறக்குதில்லை

**சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை**
**இகல் வெல்லல் யார்க்கும் அரிது — திருக்குறள்**

கடந்த மாதம் 19ந் திகதியன்று பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் ஐயா அவர்களின் எண்பதாவது பிறந்ததின நினைவு தினம். அத்தினத்திற்கு முன்பும் பின்பும் அப்பெருந்தகையின் உருவம் உள்ளத்திரையில் நிழலாடுகிறது.

க. சி. கு. அவர்களின் மறைவால் ஏற்பட்ட வெறுமை விரிவுபடுகிறது. தரமான எழுத்தைக் காணும் போதெல்லாம், எழுச்சியான பேச்சைக் கேட்கும் போதெல்லாம் அவர் நினைவால் கலங்குகிறோம். தமிழர் வாழ்வில் ஒன்றி விட்டதொரு வழக்கத்தை இது எமக்குப் புரிய வைக்கிறது. தைப்பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு, ஆடிப்பிறப்பு, தீபாவளி ஆகிய தமிழர் பண்டிகை தினத்திற்கு முதல்நாள், எம்மவர் பலர் வீடுகளில், அவ்வாண்டில் காலமான அவர்கள் குடும்பத்தவரை நினைவுகூர்ந்து துக்கம் அனுட்டிப்பதை (முன்னர் ஒப்பாரிவைப்பதை) அதன் நோக்கத்தை இந்நினைவு விளங்க வைக்கிறது.

பல அரிய நூல்களின், எண்ணற்ற கட்டுரைகளின் படைப்பாளி அவர் ''மில்க்வைற் செய்தி'' யின் கௌரவ ஆசிரியராக 182 இதழ்களைத் தந்தவர் க. சி. கு. அவர்கள். இவற்றுள் பொதிந்துள்ள தகவல்கள், விடயங்கள் பல அரியவை, பெரியவை. ''மில்க்வைற் செய்தி''யின் சிறப்பிதழ்கள் ஒவ்வொன்றும் அறிவுப் பெட்டகங்கள்.

குலரத்தினம் ஐயா அவர்களின் நாவும், எழுதுகோலும் ஓய்வு ஒழிச்சலின்றி அசைந்த படியே இருந்தன. ''நல்லவற்றை, தான் அறிந்தவற்றை நாளைய தலைமுறையினரும் அறிய வேண்டும்'' என்பது அவர் பேரவா. தமிழில் போலவே ஆங்கிலத்திலும் ஒத்த பாண்டித்தியமும் சொல்லாட்சியும் கொண்டிருந்தவர் க. சி. கு. அவர்கள். கற்பவை கசடறக் கற்றிடும் வல்லாண்மை கொண்டவர்.

அங்கிலிக்கன் பேராயர் கலாநிதி கெனத் பெர்னாண்டோ அவர்கள் வடக்கே மேற்கொண்ட நல்லெண்ண வருகையின்போது யாழ் மாநகராட்சி மன்றம் அவரையும் அவர் குழுவினரையும் வரவேற்று உபசரித்த நிகழ்ச்சியில் பல்கலைப் புலவர் திரு. க. சி. குலரத்தினம் ஐயா அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையில் உதிர்த்த வரலாற்று உண்மைகளும் பொருளாதாரத் தடைகளை விதித்து மக்களை சரணடைய வைக்க ஐரோப்பிய வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்களையும் அவைதோல்வி கண்டமை பற்றியும் அவர் எடுத்துரைத்த பாங்கும் யாழ் மண்ணில் வேறெந்த பொதுமகனும் சாதிக்கவில்லை. இதுவொன்றே அவர் பெருமைக்குக் கட்டியம் கூறுகிறது.

புறநானூற்றுப் புலவர்களில் ஆத்திரையனார் பாடலிலிருந்து சில அடிகளை நெஞ்சார நினைவு கொள்வோம்.

நெஞ்சம் திறப்போர் நிற் காண்டுவரே;
நின்யான் மறப்பின், மறக்கும் காலை;
என்உயிர் யாக்கையின் பிரியும் பொழுதும்;
என் யான் மறப்பின், மறக்குவென்.

எனது உள்ளத்தில் ஏதாவது காணவிரும்புவோர், உன்னையே காண்பர்; உன்னை யான் மறப்பது உயிர் பிரியும் போதும், என்னை நான்மறக்கும்போதுமே.

## உலகு

தமிழில் இலக்கிய இலக்கண நூல்கள் (செய்யுள்) பல தமது முதலடியில் முதற்பாடலில் உலகு என்ற சொல்லை உள்ளடக்கியவையாக உள்ளதைக் காண்கிறோம்.

| | |
|---|---|
| சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் | — உலகெலாம் உணர்ந்து |
| கம்பர் இராமாயணம் | — உலகம் யாவையும் |
| நக்கீரர் திருமுருகாற்றுப்படை | — உலகம் உவப்ப |
| நாற்கவிராச நம்பி அகப் பொருள் நூல் | — மலர்தலை உலகத்து |
| கபிலர் அகவல் | — உலகத்தீரே உலகத்தீரே |
| இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் | - அங்கண் உலகளித்தலால் |
| வள்ளுவர் திருக்குறள் | - ஆதிபகவன் முதற்றே உலகு |
| பவணந்தி நன்நூல் | — மலர்தலை உலகின் மங்கிருளகல |
| வி. க. படுக்கைப் பிதற்றல் | — உலகை நோக்கு மின் உலகை நோக்குமின் |

''உலகு'' என்ற சொல் அத்துணை சிறப்புக் கொண்டது.

★ தோப்பு இல்லாத குடும்பத்திற்குக் காப்பு இல்லை ★



# நிழல் இட்டு மலர் காய்கனிகள் ஈந்துதவும் நன்மரங்கள்

இன்று பரியோவான் சென்ற். ஜோன்ஸ் கல்லூரியின் அனுசரணையில் GREEN Focus WORLD ENVIRONMENT DAY FAI 93 என்னும் அடிநாதம் கொண்டு 1993க்கான சூழல் தினத்தை நாம் UNCED FOLLOW - UP அங்கச் செயற்பாடுகளை அடியொற்றித் தொடரும் தினமாக அனுசரிக்கிறோம்.

சுற்றுச் சூழலை நிலை பெறுத்துவதில் மரங்களும் அவற்றின் ஒவ்வொரு பகுதியும் எவ்வாறு உதவுகின்றது என்பதை நாம் இன்று சிந்திப்பது பொருத்தமாகுமென நம்புகிறோம். ஈழத்தமிழகத்தில் கோடைகாலத்தில் பெரும்பகுதி வரட்சிக்கு உள்ளாகிறது. புல், பூண்டு, செடி, மரங்கள் இன்றிக் கட்டாந்தரையாக உள்ள நிலப் பரப்பு ஏராளமாக மாறிவிடுகின்றதுண்டு. இதனால் இவை கோடை காலத்தில் வெப்பத்தில் அனல் கேந்திரங்களாக மாறிவிடுகின்றன. வெய்யிலில் இந்நிலப் பரப்பு மிக வெப்பமடைந்து அந்த மிகுவெப்பத்தைக் காற்றுக்கு ஊட்டுகிறது. அனல் காற்று அருகிலுள்ள பயிர்களை எல்லாம் தீய்த்துவிடுகின்றது. பயிருக்கு இறைத்த நீரெல்லாம் வெகுவிரைவில் உறிஞ்சப்பட்டு விளைச்சலும் குன்றிவிடுகிறது. மரங்கள் வளர்திறனை இழக்கின்றன. பயனும் நலிகிறது. இன்று இது கண்கூடு.

இதற்கான காரணமென்ன? கட்டாந்தரை நிலங்களில் விழும் மழைநீரை இத்தரை நிலத்தின் கீழ் உட்புகவிடுவதில்லை. மாறாக மழை நீரை அதன் போக்கில் விருட்டென்று ஓடிவிடச் செய்கின்றன. வெள்ளம் மண்ணையும் அரித்தெடுத்து அள்ளிச் செல்கிறது. நிலத்தடி நீரோட்டத்திற்கு நீர் சேர்வதில்லை, நீர் வரத்து இல்லாத காரணத்தினால் அயலில் உள்ள கிணறுகளில் ஆண்டுதோறும் நீர் மட்டம் தாழ்ந்து கொண்டே போகிறது. ஏனைய நீர் நிலைகளில் துரிதமாக நீர் ஆவியாக மாறிப் பயனற்றுப்போகிறது.

இக்கட்டாந்தரை நிலங்களில் வறட்சியைத் தாங்கக் கூடிய மரங்களை நட்டு வளர்ப்பதால் அவற்றின் வேர்கள் மண்ணைப்பற்றிக் கொண்டு மண்ணரிப்பைத் தடுத்து விடுகின்றன. அத்தோடு மழை நீரையும் மரங்களின் வேர்கள் தரைக்குள் இழுத்துக் கொள்கின்றன. வேர்கள் வளர்ச்சியடையும் பொழுது இறுக்கமான கடின மண்ணைப்பிளந்து காற்றோட்டத்திற்கு வகை செய்வதுடன் மழை நீர் கீழ் செல்லவும் வழியுஞ் செய்கிறது. உதிரும் இலைகளினால் மேல்மட்ட மண் அரிப்பு தடுக்கப்படுகிறது போல மரவேர்கள் மண்ணைக் கெட்டியாகப் பற்றிக் கொள்வதினால் காற்றினால் ஏற்படும் மண்ணரிப்பும் ஏற்படுவதில்லை. மரத்தின் இலைகளிலிருந்து வெளியாகும் நீராவி காற்றைக் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகிறது. காற்றில் அள்ளப்பட்டு வரும் தூசு, துகள்களை மரத்தின் இலைகள் தடுத்து வைக்கின்றன, இவை மழையின் போது கழுவப்பட்டுத் தரையைச் சேர்கின்றன. மரங்களின் தழையும், பூவும், காயும், கனியும், பட்டையும், வேரும், கிழங்கும், பிணி போக்கும் மருந்தாகவும் பசிபோக்கும் உணவாகவும் உதவுவதுடன் சுகவாழ்வுக்கான ஊட்டச்சத்தையும் உதவுகின்றன. கட்டுமான வேலைகட்கு உறுதியான தீராந்திகளையும், வளைகளையும் தருவதுடன் தொட்டிலும், கட்டிலும் ஏனைய தளபாடங்களும் செய்வதற்கும் உதவுகின்றன. வேலைவாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது. கயிறு, கடதாசி, தேயிலை, கோப்பி, ரப்பர், துணி, பூச்சிகொல்லிகள், படைகொல்லிகளும் பெற்றுக்கொள்ள மரங்களே உதவுகின்றன.

அடுப்பங்கரையிலும் சுண்ணாம்பு செங்கற் சூளைகளிலும் அவசியமான விறகை மரங்கள் தருகின்றன. நீர் நிலைகளைச் சூழ மரங்களை நட்டுவைப்பதால் அவற்றின் நிழலினால் கீழேயுள்ள தரை குளிர்ச்சியடைந்துள்ளதால் இந்நீர் நிலைகளிலுள்ள நீர் ஆவியாக மாறிவிரையமாவது வெகுவாக மட்டுப்படுத்தப்படுகிறது.

மணற்பாங்கான வரண்ட பிரதேசங்களில் அயலிலுள்ள குடியிருப்புக்களும் வயல்களும் காலத்துக்கு காலம் ஏற்படும் மணல் மாரியினால் படிப்படியாக ஆக்கிரமிக்கப்பட்டு வேளாண்மைக்குதவிய வயற்பரப்பு சுருங்குவதுடன் குடியிருப்புக்களும் கைவிடப்படும் நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. மணற்பாங்கான வரண்ட பிரதேசங்களில் வளரக்கூடிய மரங்களை நட்டு வளர்ப்பதால் மணல் மாரி தவிர்க்கப்படுவதுடன் வயல் நிலத்தையும் குடியிருப்புக்களையும் இழக்கும் துர்ப்பாக்கிய நிலை தவிர்க்கப்படலாம். மரங்களைச் சூழ உதிரும் சருகுகளும் பட்டசுள்ளிகளும் ஈரலிப்பை உண்டாக்கி கூட்டுப் பசளையாகிச் சூழ வளரும் செடி கொடிகளின் வளர்ச்சிக்கு ஊட்டமளிக்கின்றன. மண்ணின் பசளைத்தன்மைக்கும் வளத்திற்கும் வேர்கள் வெகுவாக உதவுகின்றன. ஆழச் செல்லும் வேர்கள் சிறிய மரங்களால் எட்டமுடியாத ஆழ் பரப்பிலிருந்து ஊட்டத்தையும் நீரையும், மேலே கொணர்கின்றன. முதிர்ச்சியடைந்த வேர்கள் உக்கும் பொழுது மண்ணின் வளத்திற்கு உதவுகின்றன. மரங்கள் சில ஊட்டத்தைக் காற்றிலிருந்து பெற்று அதனைக் கீழே மண்ணுக்குள் சேர்ப்பிக்கின்றன. இதனை நைதரசனைப் பதித்தல் ( NITROGEN FIXATION ) என்று கூறுவர்.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

★ மனிதன் இன்றி மரம் வளரும் ★

நிழல் இட்டு ....... (4ம் பக்கத் தொடர்ச்சி)

கோடையில் இளைப்பாற மட்டுமின்றி, குளிர்தருக்கள் கீழே அமர்ந்து, கல்விபயிலவும், உண்டு உறங்கவும் உதவுவதை எம்மைசூழக் காண்கிறோம் சுற்றுச்சூழலுக்கு மேற்கண்டவாறு பல்லாற்றானும் உதவிடும் மரங்கள் பல்துறைப்பட்ட தொழில்வாய்ப்பை ஏற்படுத்தித் தருகின்றன.

பாலைவனத்தைச் சோலைவனமாக்கும் முயற்சிகள் சவூதி அரேபிய அரசினால் சகாரா பாலைவனத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வெளியே இருந்து வேப்பம் கன்றுகளைப் பெருஞ் செலவில் தருவித்து நட்டுப்பராமரிக்கும் செய்திட்டமொன்று அங்கு செயற்படுகிறது. ஒரு மரத்தை வளர்த்தெடுக்க ஒரு இலட்சம் ரூபா செலவாகுமென உத்தேசிக்கப்பட்டுள்ளது: வனமகோற்சவத்தை வருடா வருடம் நடத்தி வைத்த சீரியதொரு கலாச்சாரத்தைப் பின்னணியாகக் கொண்ட நாம் இன்று காடுகளை அழித்து மரங்களைத் தறித்து பருவ நிலைகளைத் தடுமாற வைத்துவிட்டோம்.

நினைவு தினங்களில் மரம் நடுவது என்பதை விரதமாகவும், தறிக்கப்படும் ஒவ்வொரு மரத்திற்குப் பதிலாக மற்றுமொரு மரத்தை நடுவோம் - பராமரிப்போம் என்பதைச் சபதமாகவும் ஏற்று நாம் ஒவ்வொருவரும் செயற்படுவது அவசியம்: முனைப்புடன் செயற்படுவோம்.

நன்றி, வணக்கம்.

(1993 உலக சூழல் தினத்தில் கலாநிதி கந்தையா கனகரராசா அவர்கள் ஆற்றிய உரை)

## பிராணாயாமம்

நம் உடப்பு இந்த வாழ்க்கைக்குப் பயன் படுவது. இந்த உலக வாழ்க்கை முடிந்தபிறகு பயன்படுவது ஆத்ம சரீரம். இந்த இரண்டுக்கும் இணைப்பாக இருப்பது பிராணன். நம்முடைய வாழ்க்கையில் உயிருள்ளவரை, அது நமது இந்திரியங்களை இயக்கி நம்மைச் செயற்பட வைக்கிறது. உயிர் பிரிந்து செயல்கள் அடங்கியதும் பிராணன் ஆத்ம சரீரத்தில் அடங்கிப் போய் விடுகிறது. செயற் கருவிக்குப் பெட்ரோல்போல, நமது உடலில் காற்றைச் சுவாசப்பையில் நிரப்பி நமது இரத்தத்தைச் சுத்தம் செய்து, நம்மை இயக்குவது பிராணன். இந்தக் காற்று எங்கிருந்து வருகிறது? பிராணன் என்ற சக்தியும் ஆகாசம் என்ற பொருளும் இணையும்போதுதான் பிரம்மாண்டம் உருவாகிறது.

இந்த மூச்சைக்கட்டுப்படுத்தினால் உடம்பில் இரத்த ஓட்டம், அதில் உள்ள உணர்ச்சிகளின் இயக்கம் இரண்டையுமே கட்டுப்படுத்தலாம். அதனால் உடம்பிலும் கட்டான அமைப்பு, முகத்தில் ஒளி, பார்வையில் கூர்மை போன்ற முன்னேற்றங்கள் தெரியும். உள்ளத்திலும் சிரத்தை, கவனம், சிந்தனையில் கூர்மை போன்ற முன்னேற்றங்கள் கிடைக்கும். இதனால்தான் பிராணாயாமம் மிகவும் உயர்ந்ததாகக் கருதப்படுகிறது.

மூச்சு விடுவது என்பது உடம்பைப்பொறுத்தது. அதை நம்முடைய உள்ளத்திறனைப் பயன் படுத்திக் கட்டுப்படுத்தும்போது, அதுவே சக்தியளிக்கும், புத்துயிர் அளிக்கும் வல்லமை கொண்டதாக ஆகிவிடுகின்றது. உடம்பில் உள்ள பல நோய்களும் நீங்குகின்றன. உள்ளமும் தூய்மை அடைகிறது. இதைச் செய்ய நாம் ஓடியாடி உழைக்க வேண்டியதில்லை. உட்கார்ந்த இடத்திலேயே செய்யமுடியும்.

கருத்தை ஊன்றி ஒரு நாசியை மூடி சுவாசத்தை உள்ளே இழுங்கள். இதை மெதுவாக எவ்வளவு முடியுமோ அப்படிச் செய்யுங்கள். பிறகு அந்தக் காற்றை உள்ளே எவ்வளவு தூரம் சிரமமின்றி வைத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு தூரம் வைத்துக் கொள்ளுங்கள். பிறகு மறுநாசி மூலம் மெதுவாக வெளியே விடுங்கள், இதுதான் இந்தப்பயிற்சியின் அடிப்படை. உடம்பில் சிரமம் இருக்கக்கூடாது. உள்ளத்தில் கவனம் கலையக்கூடாது. இந்த இரண்டுமே முக்கியம்.

— சுவாமி சிவானந்தர் —

செயலை விதைத்து — மனப்பாங்கை அறுவடை செய் மனப்பாங்கினை விதைத்து — ஒரு வழக்கத்தை அறுவடை செய், வழக்கத்தை விதைத்து – குணப்பாங்கை அறுவடை செய், குணப்பண்பை விதைத்து விதியை அறுவடை செய், உன் விதியை உருவாக்குவது நீயே அதனை ஆக்கவும் அழிக்கவும் உன்னால் முடியும்.

## வைத்தியப் பிரிவுகள்

| | |
|---|---|
| Aurology | காது நோய் வைத்தியம் |
| Dermatology | தோல் சம்பந்தமான வைத்தியம் |
| Gerontology | வயோதிகம் பற்றிய வைத்தியம் |
| Gynaecology | பெண்களுக்கு மட்டுமே உரிய நோய் வைத்தியம் |
| Nephrology | சிறுநீரக நோய் வைத்தியம் |
| Psychiatry | மன நோய் வைத்தியம் |
| Rheumatology | மூட்டுத்தசை வைத்தியம் |
| Immunology | நோய் தடுப்பூசி வைத்தியம் |
| Oncology | புற்று நோய் வைத்தியம் |
| Obsterics | தாய்மை பிரசவ வைத்தியம் |
| Cardiology | இருதய கோளாறு வைத்தியம் |
| Paediatrics | குழந்தை நோய்கள் வைத்தியம் |
| Neonatology | பச்சிளங் குழந்தை மருத்துவம் |

★ மரம் இன்றி மனிதன் வாழமுடியாது ★

## விண்ணாட்டுக் கற்பகமே வியனுலகில் மரங்கள்!

1. மண்ணீரம் காயுமுன் மரங்களை நாம்நட்டால்
உண்ணீர் உண்ணீரென உபகரிக்கும் அவைதாம்
தண்ணீரும் பாய்ச்சித் தழைக்க வைத்தால் அவைதாம்
விண்ணாட்டுக் கற்பகம்போல் வியனுலகில் ஈயும்.

2. விறகுதரும் மரங்கள்பல விரும்பிய வாறுதவும்
நறுமலர்கள் தருமவைதாம் நானிலத்தில் பலவாம்
உறவுநிறை விலங்கினங்கள் தங்குமிடம் மரங்கள்
சிறகுலர்த்தும் பறவைகளும் சேருமிடம் மரங்கள்.

3. மண்குளிர மழை பொழிவை வாவென்றழைக்கும்
விண்ணதிரும் புயலினையும் விடோமெனவே தடுக்கும்
கண்ணிணையிமை காப்பதுபோல் காசினியைக் காக்கும்
பண்ணைவளம் செழிப்பதற்கு மரநிரைகள் முதன்மை.

4. மாடுதின்ன ஆடுதின்ன மக்கள் உண்ண இலைகள்
வீடுகட்டி வாழ்வதற்கு விந்தைமிகு மரங்கள்
காடுவளம் சிறப்பதற்குக் கனத்தபெரு மரங்கள்
நாடுவளம் சிறப்பதற்கும் நல்லமரம் முதன்மை.

5. தொட்டில்செய்து தாலாட்ட மரமுதவும் முதலில்
கொட்டில் குடில் குடிசைகளில் மரமுதவியதிகம்
கட்டில்முதல் தளபாட வரிசைகளும் மரத்தால்
நட்டிடல் மரவரிசை நமதுபெருங் கடமை.

6. பிறந்தநாள் நினைவுகொளப் பிந்தாமல் நடுக
இறந்தவர்தம் நினைவாக ஏதும்ஒன்று நடுக
அறந்தழைக்க வேண்டுமெனில் அவசியம் நடுக
பிறந்தபயன் பெயர்நிலைக்கப் பெருமரங்கள் நடுக.

— மில்க்வைற் செய்தி 01-02-1984




## தெய்வீக மூலிகைகள்

மூலிகைகள் இயற்கையானவை. தெய்வத் தன்மை வாய்ந்தவை. ஞானிகள் பக்கத்தால் செல்லும்போது மூலிகைகள் அவர்களுடன் கதைக்குமாம். தன் மருத்துவத்தன்மை எது, பயன்பெறத் தன்னைப் பயன்படுத்தும் முறைகள் எவை என்பவற்றைக் கூறித் தன்னைப் பயன்படுத்தும்படியும் மூலிகை இவர்களை வேண்டிக்கொள்ளுமாம்.

இந்த வகையில்தான் சித்தர்களுக்கு மூலிகைகளோடு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. மூலிகைகளின் வேர், தண்டு, பட்டை, இலை, பூ, காய், கனி, விதை ஆகிய பாகங்களை நன்கு அறிந்தார்கள். இரண்டுக்கு மேற்பட்ட மூலிகைகளைச் சேர்க்கும்போது அதனால் ஏற்படும் வேறு பாடுகளையும் அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள்.

மூலிகைகளை அவரவர் நோய்க்கேற்றபடி கையாள வேண்டும். மூலிகைகளில் பல பத்திய உணவாகப் பயன்படுவன, சூரணமாக்கித் துணியில் அரித்தெடுத்துப் பயன்படுத்துவன சில, தண்ணீரில் கொதிக்க வைத்து ஊவு பிடிப்பன சில; உட்கொள்ளப்படுவன சில, கொதிக்க வைத்து ஆவி பிடிப்பன சில; அரைத்துப் பற்றுப் போட்டு உருவித் தேய்ப்பன சில.

வள்ளலார் இராமலிங்க அடிகள் ஒரு ஞானி, அவரிடம் இத்தகைய 485 மூலிகைகள் பேசினவாம். அவற்றுள் 45 மூலிகைகள் ஞான மூலிகைகளாம். அவற்றைக் கொண்டு உடம்பையே ஜோதிமயமாக்கலாமாம்.

வளவுகளில் மூலிகைகள் தாமாகவே வளர்ந்து காணப்படுகின்றன. குப்பைமேனி, நாயுருவி, முசுட்டை முல்லை, பிரண்டை, தூதுவளை, ஆடாதோடை, முசுமுசுக்கை, அறுகு, நொச்சி, முருங்கை, கீழ்க்காய் நெல்லி, நன்னாரி, ஆகியவை பயன்மிக்க மூலிகைகள் முந்தையோர் இவற்றைப் பேணிப் பாதுகாத்து வந்தார்கள். இதனால் கைமருந்து என்ற பெயரால் பாட்டிமார் வீட்டு வைத்தியம் செய்து நோய்களைத் தீர்த்தனர்.

## விஞ்ஞானக் குறிப்பீடும் திரிபுண்டரீகமும்

''மதக்கோடுகள் விஞ்ஞானத்திலும் பொருள் மிக்க குறிப்பீடுகளாகப் பரிமளிக்கின்றன. உதாரணமாக, வெப்பதட்ப நிலையைப் பற்றிக் கூறும் வளியியலிலே (Meteorology) மழை வீழ்ச்சியில் மூடு பனியைக் குறிக்கும் குறிப்பீடு — ☰

பனி படர்ந்த இமயத்தில் உறைந்து நிற்கும் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் தரித்திருக்கும் திரிபுண்டரிக விபூதி வடிவமாக இது தோன்றுகிறது.

அந்த இறைவனுக்கும் அடர்மூடு பனிக்குமுள்ள தொடர்பைத், தெரிந்தோ, தெரியாமலோ விஞ்ஞானம் ஏற்றுக் கொண்டுவிட்டது. ''என்று திரு. ஜே. ஸி. குமரப்பா அவர்களின்'' நான் கண்ட திபேத் (Tibet) என்ற நூலில் கூறியிருக்கிறார்.

### தோட்டத்துக் காமதேனு.

**வாழை**

உணவுக்கு வாழைக் காயாக
ஊட்டத்திற்கு வாழைப்பழமாக
சமையலுக்கு வாழைப்பூவாக, தண்டாக
பட்டையாக, நாராக, மருந்துக்கு வாழைக்கிழங்காக
விருந்துக்கு [illegible]ழை இலையாக
மங்கள [illegible]ளுக்கு வாழை மரமாக
வா[illegible]யாகப் பெருகி
ம[illegible] நலன் புரிகிறது.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர்! திரு. சி. அ. பாலசிங்கம் 1-11-94